புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கருமம் என்பதன் பொருள்

**கட்டுரையாளர்**

**முனைவர் ம.சரளாதேவி,**
உதவிப்பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி( தன்னாட்சி),
திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்- 635601

கருமம் என்பதற்குப் பல்வேறு வகையான பொருள்கள் வழங்கி வருகின்றன. தொல்காப்பியம் தொடங்கி இக்காலம் வரையில் பல பொருள்களில் பயன்படுத்துகின்றனர். கருமம் என்ற சொல் குறித்துப் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. அவை எந்தெந்தப் பொருள்களில் தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் பயன்படுத்தியுள்ளன. இக்காலத்தில் என்ன பொருளில் கருமம் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. கருமம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் என்ன என்பதை ஆராயும் வகையில் ஒப்பீட்டு முறை மற்றும் விளக்க முறை அடிப்படையில் இக்கட்டுரை அமைகின்றது.

## கருமம் என்பதன் பொருள்

கர்மா அல்லது வினைப்பயன் என்பது ஒருவரின் தற்போதைய மற்றும் முந்தைய பிறவியில் செய்த செயல்களின் வெளிப்பாடாகும். இது எதிர்காலத்தில் அவர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கிறது என்பர். கர்மா என்பது ஒருவருக்கு விதிக்கப்பட்ட தலைவிதி அல்ல. அது அவரவர் செய்யும் வினைப்பயன் அல்லது கர்மவினை ஆகும். "கன்மம் என்பதும் கருமம் என்பதும் ஒன்றே. நாம் வினை என்று சொல்லுகின்றோமே அதுவும் கன்மமே. நாம் செய்யும் செயல்கள் யாவும் கன்மங்களே யாகும். எல்லா செயல்கட்கும் பலன் உண்டு. அப்பலன்கள் யாவும் செய்தவனையே சென்று அடையும். சில செயல்களின் பலன்கள் உடனேயே சேரும். சில செயல்களின் பலன்கள் சிலகாலம் சென்று சேரும்.'' ( ந.சுப்பு ரெட்டியார்,

*சைவ சமய விளக்கு, பக்.184-185) இந்து மற்றும் பிற சமயங்களில் கருமம் என்ற சொல்லுக்குச் செயல் என்பது பொதுவான பொருள். ஒவ்வொரு செயலுக்கும் எதிர் வினை உண்டு என்பது உலகப் பொது வழக்கு. அதன் அடிப்படையில் இந்து, பௌத்தம் மற்றும் சமண சமயத்திலும் ஒவ்வொருவரின் செயல் வினைக்கும் அதற்கேற்றாற்போல் பலன் கிடைக்கும் என்பதைக் குறிப்பதற்கு கர்மா என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இதனைத் தமிழில் வினைப்பயன் என்றும் கூறுவர்.*

*நர்மதாவின் தமிழ் அகராதி "கருமம் என்பதற்குச் செயல், கடமை" (ப.231) என்று பொருள் கூறுகின்றது. தீவினைகள் செய்பவருக்கு அதன் விளைவு மறு பிறவியிலும் தொடரும். அவர் நினைத்தபடி எதுவும் நடைபெறாது. அவருடைய செயல்களுக்கு ஏற்பவே பலன்களை அளிப்பார் கடவுள். கற்பக விருட்சத்தினாலும் அவருக்கு நல்லது செய்ய முடியாது என்கிறது மூதுரை.*

*"எழுதியவாறே காண் இரங்கு மடநெஞ்சே*
*கருதியவாறு ஆமோ கருமம் – கருதிப் போய்*
*கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய்*
*முன் பவத்தில் செய்த வினை" (மூதுரை.22)*

*மு.சண்முகம்பிள்ளையின் தமிழ்- தமிழ் அகரமுதலி கருமம் என்பதற்கு "செயல் வினைப்பயன், தொழில், வேதசம்பந்தமான சடங்கு, இறுதிக்கடன், செயப்படுபொருள், வெம்மை, மும்மலங்களுள் ஒன்றாகிய கன்மவிதி" (ப.277) என்று பொருள் கூறுகின்றது. ஒருவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவன் முற்பிறவியில் செய்த புண்ணியம் வந்து கைகொடுக்கும் போதுதான் அவன் எண்ணிய காரியம் கைகூடும். அப்படி இல்லாமல் அவன் காரியம் கைகூடாது. கைப்பொருளையும் இழந்து துன்பப்படுவான் என்கிறது நல்வழி.*

*"எண்ணிய ஒரு கருமம் யார்க்கும் செய் யொண்ணாது*
*புண்ணியம் வந்து எய்துபோது அல்லால் கண்இல்லான்*
*மாங்காய் வழி எறிந்த மாத்திரைக் கோல் ஒக்குமே*
*ஆம்காலம் ஆகும் அவர்க்கு" (நல்வழி. 4)*

*நா.கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி கருமம் என்பதற்கு "இயற்கைச்சொல் உட்டணம், கடமை, காரியம், கிரியை, செயப்படுபொருள், செய்கை, முன்வினை, வெப்பம், வேனிற்காலம்" (ப.401) என்று பொருள் கூறுகின்றது. கருமம் என்பதற்குப் பல்வேறு பொருள்கள் சொல்லப்பட்டாலும் கடமை, செயல் அல்லது வினைப்பயன் என்பதே பெரும்பான்மை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.*

***இலக்கண நூல்களில், சங்க இலக்கியத்தில் கருமம்***

*முதல் இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியத்தில் கருமம் குறித்த செய்தி காணப்படுகின்றது.*

*''கருமம் அல்லாச் சார்புஎன் கிளவிக்கு*
*உரிமையும் உடைத்தே கண்என் வேற்றுமை''(தொல்.சொல்.84)*

*உடல் ஒன்றைச் சார்வது கருமச் சார்பாகும். தூணைச் சார்ந்தான் - தூணின்கண் சார்ந்தான் (கருமச் சார்பு)*

*''கட்டார் கருத்தா முதல் காரகம் அவை கட்டுரைப்பின்*
*ஒட்டார் கருத்தா கருமம் கரணம் ஓண் கோளியொடும்''*
*(வீரசோழியம்.29)*

*செயல், வினைப்பயன், கடமை என்று அகராதி பொருள் கூறும் நிலையில் ஒன்றைச் சார்தல் என்ற நிலையில் செயல் அடிப்படையில் தொல்காப்பியத்தில் கருமம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. வீரசோழியத்திலும் செயலின் அடிப்படையிலேயே கருமம் என்ற சொல் இடம்பெற்றுள்ளது. சங்க இலக்கியத்திலும் கருமம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*''நுண்பல் கருமம் நினையாது*
*இளையன் என்று இகழின் பெறல் அரிது''(புறநானூறு.104)*

*தலைவன் ஆற்றலை அறியாமல் இளையவன் என்று கருதி இகழ்ந்தால் நும்மால் வெல்லுதல் இயலாது. சங்க இலக்கியத்திலும் ஆற்றல் என்பது செயலை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது.*

**காப்பியங்களில், நீதி நூல்களில் கருமம்**

*காப்பியங்களிலும் கருமம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*''கரும வினைஞருங் கணக்கியல் வினைஞரும்'' (சிலம்பு.26,40)*

*கடுகிய செலவினையுடைய யானையையுடைய அரசற்குச் சிறந்தோராகிய அந்தணரும் என்று கூறுவதிலிருந்து செயல் என்பதை உணர்த்துகின்றது. நீதி நூல்களில் அதிகமாகக் கருமம் என்ற சொல் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. நாம் எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் அதை ஆராய்ந்து செய்ய வேண்டும். திட்டமிட வேண்டும். அக்காரியத்தின் பலாபலன்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். செய்யும் செயல் பெரியதானாலும் சிறியதானாலும் அதை முடிக்கும் வழிமுறைகளைச் சிந்தித்து ஆராய்ந்தே செயல்பட வேண்டும். எதையும் பிறகு சிந்திப்போம் என்று சோம்பேறித்தனமாக விட்டுவிட்டால் தொடங்கிய காரியம் தடைபடும்.*

*''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு'' (குறள்.467)*

*ஒரு வினையைக் கடமையாகக் கருதித் தொடங்கும்முன் நன்றாக ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும். தொடங்கியபின் தயங்கிப் பின்னோக்கி எண்ணுவது இழிவைத் தரும். இதைத்தான் ஔவையார் ''நுண்ணிய கருமம் எண்ணித் துணி'' (கொன்றைவேந்தன்,52) என்று கூறியுள்ளார்.*

*''மெய்வருத்தம் பாரா பசிநோக்கார் கண்துஞ்சார்*
*எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி*

*அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்*
*கருமமே கண்ணாயி னார்" (நீதிநெறி விளக்கம்-52)*

*தாம் மேற்கொண்ட ஒரு செயலைச் செய்து முடிப்பதில் ஊக்கமுடையவர்கள் தாம் அடையும் உடல் துன்பததைக் கருதார் பசியை மதியார், அச்செயலையே இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பதால் கண் உறக்கமும் கொள்ளார். பிறர் செய்யும் தீமையையும் பொருட்படுத்தமாட்டார். காலத்தின் அருமையையும் எண்ணமாட்டார். பிறர் தம்மை அவமதித்தலையும் சிறிதும் மனத்தில் கொள்ளார். "கருமமே கண்ணாக என்பது அறிவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு கடினமான வேலையை, எந்த கவனச்சிதறலுக்கும் ஆளாகாமல் ஒருமித்த கவனக்குவிப்புடன் மேற்கொள்வதற்கான திறனாகும்." (பி.எஸ்.வி.குமாரசாமி, கருமமே கண்ணாக)*

*"நந்து எறும்பு தூக்கணம்புள் காக்கை என்று இவைபோல்*
*தம் கருமம் நல்ல கடைப்பிடித்து தம் கருமம்*
*அப்பெற்றியாக முயல்பவர்க்கு ஆசாரம்*
*எப்பெற்றியானும் படும்" (ஆசாரக்கோவை.96)*

*சுறுசுறுப்புடைய எறும்பு, தூக்கணாங்குருவி, காக்கை ஆகியவற்றைப்போலத் தம் கருமமே கண்ணாக இருந்து தம் கருமம் வெற்றி அடைய அயராது முயல்பவர்க்கு ஒழுக்கம் எந்த நிலையிலும் செழிக்கும். நடுநிலையாக முறை செய்யவேண்டிய தம் கடமை தவறாமல் கண்ணோட வல்ல அரசர்க்கு இவ்வுலகம் நிலையான உரிமையாகும் தன்மை உடையதாம். கருமஞ் சிதையாமல் என்பதால் இவ்வதிகாரத்திற் கூறப்பட்டது நெறிதவறாத நற்கண்ணோட்டமே என்பது அறியப்படும் என்று திருக்குறளுக்கு தேவநேயப் பாவாணர் உரை கூறியுள்ளார்.*

*"கருமம் சிதையாமல் கண்ணோட வல்லா ார்க்கு*

*உரிமை உடைத்திவ் வுலகு" (குறள்.578)*

*"தவம் செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்*
*அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" (குறள்.266)*

*சமுதாய வாழ்க்கையில் தம் கடமைகளைச் செம்மையாகச் செய்பவர்களே தவம் என்னும் நோன்பை மேற்கொள்பவர்கள். அது இயலாத மற்றவர்கள் பேராசையினால் தகாதவற்றைச் செய்பவர்கள்.*

*"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்*
*பெருமையின் பீடுடையது இல்."(குறள்.1021)*

*சமுதாயத்திற்குத் தம் கடமைகளைச் செய்யாது கைவிரிக்க மாட்டோம் என்ற உறுதியைப் போன்ற பெருமையிலும் மேலான புகழ் வேறில்லை.*

*"தனிமை இடத்துக்கண் தம் கருமம் சொல்லார்"*

*(ஆசாரக்கோவை.69)*

*அரசர் முன் நற்பண்பு இல்லாதவர் இனிமை தருவனவற்றை யாம் அறிந்தே வைத்திருக்கிறோம் என்று தாமாக முன் சென்று சொல்லார் என்கின்றது ஆசாரக்கோவை.*

*”கரும வசையாற் கல்லாதார் பின்னும்*
*பெருமை யுடையாரும் சேறல்” (நாலடியார்.249)*

*சமுதாயத்திற்குப் பயன்தரத்தக்க ஒரு நல்ல காரியம் முறைப்படி இனிதே நிறைவேறும் பொருட்டு, பெருமை யுடையோரும் அறிவிலார் பின் செல்வது அறியாமையன்று. அது அறிவுடைமையே என்று நாலடியார் கூறுகின்றது. ”மேற்கத்திய நாடுகளில் உள்ள பெரும்பாலான மக்கள் கர்மாவை பழைய பழமொழியுடன் ஒப்பிடுகிறார்கள். நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுவடை செய்கிறீர்கள்” (யோகாபீடியா, நவம்பர் 10, 2017) மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம் என்பது ஆன்றோர் வாக்கு. பெரியோர்களின் சொல்படி கேட்டு நடக்கவில்லை என்றால் அழிவுதான் ஏற்படும். இதைத்தான் ஔவையார் ”மொழிவது மறுக்கின் அழிவின் கருமம்” (கொன்றைவேந்தன், 79)என்று கூறியுள்ளார். உமி நீங்கப்பெற்ற அரிசியினால் எப்படி முளைத்துப் பலன் தரமுடியாதோ அதேபோல, துணை வலிமை இல்லாதவர்களால் ஒரு காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியாது.*

*”பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்*
*விண்டு உமிபோனால் முளையாது ஆம் – கொண்டபேர்*
*ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவு இன்றி*
*ஏற்ற கருமம் செயல்” (மூதுரை.11)*

*நீதி நூல்கள் கருமம் என்பதற்கு ஒரு செயலைச் செய்தல் குறித்துப் பேசுகின்றன. அச்செயலைச் செய்யவில்லை என்றால் அழிவு நிலை ஏற்படும் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன.*

***சமய நூல்களில், தற்காலத்தில் கருமம்***

*அறிஞர் அண்ணா “எண்ணித் துணிக கருமம்“ என்ற பெயரில் நூல் எழுதியுள்ளார். சமய நூல்களிலும் தற்காலத்திலும் கருமம் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருந்தாலும் இக்காலத்தில் மிக மோசமான பொருளைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுவதை அறியமுடிகின்றது. நல்ல குணம் கொண்டவர்களிடம் பயன் கருதிச் செயல் செய்யும் பண்பு இருக்காது என்பதை எடுத்துரைக்கின்றது திருமந்திரம்.*

*”கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்*
*தின்றலுஞ் சுவைத்தலுஞ் தீமை செய்தலும்*
*பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்*
*என்றிவை இறைவன்பால் இயற்கை அல்லவே”(திருமந்திரம்1658)*

*பழி சொற்களும் குறை கூறுதலும் என்றுமே இருந்துகொண்டுதான் இருக்கும். அதையெல்லாம் பொருட்படுத்தாது நமக்கு ஒப்புவிக்கப்பட்டவைகளை நாம் செய்து முடிக்க*

*வேண்டும் என்பதை நீதிமொழி எடுத்துரைக்கின்றது. "தன் அலுவலில் திறமை காட்டுகின்ற ஒருவரைப் பார். அவர் பாமர மனிதரிடையே இரார். அரசு அவையில் இருப்பார்." (நீதிமொழிகள்.22.29) இக்காலத்தில் கருமம் என்ற சொல் செயலை உணர்த்தினாலும் மோசமான செயலைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.*

*"சீ கருமம், இதப்போயி என்று தட்டி விடுகிறாள்.*

*சீ நாத்தம் பிடியச்சவா ஓண்ட மனுசி பேசுவாளா."*

*(எஸ்.காமராஜ், மருளாடியின் மேலிறங்கியவர்கள்)*

*சீ கருமம் கண்றாவி*

*அட சீ கருமம் கருமம்*

*போன்ற சொற்களை இக்காலத்தில் உரைநடையில் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. நாற்றம் என்ற சொல் அக்காலத்தில் வாசனை என்பதைக் குறித்தது. ஆனால் இக்காலத்தில் கெட்ட வாசனை என்பதைக் குறிப்பது போன்று, கருமம் என்ற சொல் இக்காலத்தில் கெட்ட வார்த்தையாக மாறியுள்ளது.*

**கருமம் என்ற சொல்லுக்கு நூல்கள் தரும் பொருள்கள்**

| **வ. எண்** | **நூல்கள்** | **இலக்கண நூல்களில், சங்க இலக்கியத்தில்** | **காப்பியங்களில்,நீதி நூல்களில்** | **சமய நூல்களில், தற்காலத்தில்** |
|---|---|---|---|---|
| *1.* | தொல்காப்பியம் | சார்ந்திருத்தல் | | |
| *2.* | வீரசோழியம் | செயப்படுபொருள் | | |
| *3.* | புறநானூறு | செயல்திறம் | | |
| *4.* | நாலடியார் | | நல்ல காரியம் | |
| *5.* | திருக்குறள் | | கடமை | |
| *6.* | ஆசாரக்கோவை | | திறமை, உழைப்பு | |
| *7.* | கொன்றைவேந்தன் | | ஆராய்தல், திட்டமிடல் | |
| *8.* | மூதுரை | | காரியம் | |
| *9.* | நீதிநெறி விளக்கம் | | செயல் | |
| *10.* | திருமந்திரம் | | | செயல் |
| *11.* | நீதிமொழிகள் | | | திறமை |
| *12.* | மருளாடியின் மேலிறங்கியவர்கள் | | | மோசமான செயல்பாடு |

**முடிவாக**

கருமம் என்ற சொல் ஒரு செயலின் வெளிப்பாட்டினை உணர்த்த உருவாக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆனால் தொல்காப்பியர் காலத்தில் சார்ந்திருத்தல் என்ற பொருளிலும் காப்பியம், நீதி நூல்களில் நல்ல காரியம், கடமை, உழைப்பு போன்ற பொருள்களிலும் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இக்காலத்தில் கருமம் என்ற சொல்லுடன் பிற சொற்களையும் சேர்த்து மோசமான பொருளைத் தரக்கூடிய சொல்லாக உருவாக்கிவிட்டனர். நல்ல செயலை உணர்த்த உருவாக்கப்பட்ட ஒரு சொல் கால மாற்றத்திற்கு ஏற்ப கெட்ட செயலை உணர்த்தும் சொல்லாக மாற்றம் பெற்றுள்ளது. எந்தச் சொல்லையும் அதன் பொருளையும் மாற்றி அமைக்கும் ஆற்றல் காலத்திற்கு உண்டு என்ற உண்மை புலனாகின்றது.

**துணை நின்ற நூல்கள்**


1. ந.சுப்புரெட்டியார், சைவ சமய விளக்கு, பக்.184-185
2. நர்மதாவின் தமிழ் அகராதி, ப.231
3. மூதுரை,11, 22
4. மு.சண்முகம்பிள்ளை(தொ.ஆ), தமிழ் – தமிழ் அகராதி, ப.277
5. நல்வழி, 4
6. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ் மொழி அகராதி, ப.401
7. தொல்காப்பியம், சொல்லதிகாரம்.84
8. வீரசோழியம், 29
9. புறநானூறு.104
10. சிலப்பதிகாரம், 26.40
11. திருக்குறள், 266, 467, 578, 1021
12. நீதிநெறி விளக்கம்.52
13. பி.எஸ்.வி.குமாரசாமி, கருமமே கண்ணாக
14. ஆசாரக்கோவை, 69, 96
15. நாலடியார், 249
16. யோகா பீடியா, நவம்பர் 10, 2017
17. கொன்றை வேந்தன், 79
18. திருமந்திரம், 1658
19. நீதிமொழிகள், 22.29
20. எஸ்.காமராஜ், மருளாடியின் மேலிறங்கி